வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை பற்றி.. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல. அதுபற்றி, முறையாக நீங்கள் என் கவனத்திற்கு எழுதிக்கொடுத்துவிட்டு, நீங்கள் செய்யலாம். இதில் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுகிற எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. திரு. போளூர் வரதன் (குறுக்கீடு) நான் திரு. போளூர் வரதன் அவர்களை அழைத்திருக்கிறேன். (குறுக்கீடு) அதற்கு முறைப்படி எழுதிக் கொடுங்கள்.

திரு. குமரி அனந்தன் : என்னுடைய உரிமைப் பிரச்சினை என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் உரிமைப் பிரச் சினையா ? அதை நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம்.

திரு. குமரி அனந்தன் : இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக் காலையிலே எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தேன். இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லை. காவல் துறை மானியக் கோரிக்கை எடுக்கிறகாரணத்தினால் நாளை எடுத்துக்கொள்ளலாம்.(குறுக்கீடு) அந்த வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலே இன்றைக்கு எடுக்க வில்லை. (குறுக்கீடு) நேற்றைய தினம் எடுப்பதாகச் சொல்லி யிருந்தேன். நேற்று அந்த வாய்ப்பு இல்லை. இன்றைக்கும் கேள்வி நேரம் இல்லை. நேரடியாக நாம் அலுவல்களுக்குச் செல்கின்ற காரணத்தினாலே நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

2. கவன ஈர்ப்பு.

(அ) செம்பரம்பாக்கம் ஏரியின் ஆயக்கட்டிலுள்ள விவசாய நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. போளூர் வரதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

1993 ஏப்ரல் 20]

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செம்பரம்பாக்கம் ஏரியின் ஆயக்கட்டிலுள்ள 3,000 ஏக்கர் விவசாய நிலத்திற்குத் தண்ணீர் கிடைக்காதது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை.

செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கம் ஏரியில், 16—4—1993 அன்று உள்ள அளவின்படி, நீரின் இருப்பு 101.25 மி.கன அடி ஆகும். ஏரியின் நீர்மட்ட உயரம் 3.25 அடி ஆகும்.

2. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து பாசனத்திற்காக பயன் பெறும் நிலங்களில் நெல், கடலை, வாழை மற்றும் வெற்றிலை ஆகிய பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும் பான்மையான பரப்பில் நெற்பயிர்தான் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது சுமார் 2,500 ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் உள்ளன. இந்த 2,500 ஏக்கரில் இரண்டாம் போகம் பயிர் செய்ய தகுதி உள்ள பரப்பளவு 1,200 ஏக்கர் மட்டுமே. நெல் பயிர் பூக்கும் தருவாயில் இருந்து அறுவடை செய்யும் நிலை வரை உள்ளது. இதற்கு இன்னும் 20 முதல் 25 நாட்கள் வரை தண்ணீர் தேவைப் படும். இன்னும் 4 முறை நனைப்பிற்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தால் பயிர் முழுமையாக அறுவடைக்கு வந்துவிடும். இந்த நான்கு நனைப்பிற்கும் சுமார் 36 முதல் 40 மி.க. அடி மட்டுமே தண்ணீர் தேவைப்படும். செம்பரம்பாக்கம் ஏரியில் தற்போது இருப்பில் உள்ள 101.25 மி.க.அடி தண்ணீரைக் கொண்டு இதனை எளிதாக சமாளிக்கலாம். தற்போது ஏரியில் பாசனத்திற்கு வினாடிக்கு 20 கன அடியும், குடிநீர் தேவைக்கு வினாடிக்கு 15 கன அடியும் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது நாள் ஒன்றுக்கு சுமார் 3 மில்லியன் கன அடி நீர் எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பிலுள்ள 101.25 மி.க.அடி. தண்ணீர் மேலும் 30 நாட்களுக்கு பாசனத்திற்கும் மற்றும் குடிநீர் தேவைக் கும் போதுமானதாக உள்ளது.

3. ஆகவே, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள செம் பரம்பாக்கம் ஏரியின் கீழ் உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு பாசன வசதிக்காக போதிய தண்ணீர் உள்ளது.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, இங்கே அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் 16–4–1993 அன்று உள்ள நிலவரப்படி

[1993 ஏப்ரல் 20

[திரு. போளூர் வரதன்]

ஏரியில் 3.25 அடி தண்ணீர் மட்ட உயரம் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 10, 12 தினங்களுக்கு முன்பாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சென்னை நகருக்கு குடிநீர் தேவைப்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, செம்பரம்பாக்கம் ஏரிக்குச் சென்று அந்த ஏரியினுடைய நிலவரத்தைப் பார்த்திருக்கிறார்கள். அரசு விவசாயிகளுக்கு எந்தவிதமான முன் அறிவிப்பும் செய்யாமல் திடீரென்று அந்த பகுதிக்குத் தண்ணீர் விடுவதை அதிகாரிகள் நிறுத்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) கேள்விதான். அதனாலே அந்த பகுதியிலே இன்றைய தினம் விவசாயிகள் மத்தியிலே பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் முடியும் தருவாயிலே, இன்றைக்குப் பயிர்கள் கதிர்விடும் தருவாயிலே நிலங்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கு முன்கூட்டியே 'தண்ணீர் தேவைப்படுகிறது' என்பதைப் பற்றி தெரிவித்திருந்தால், அவர்கள் தங்களுடைய தொழிலை நிறுத்தியிருப்பார்கள். முன் அறிவிப்பு இல்லாமல் அரசு இந்த நடவடிக்கை எடுத்ததன் விளைவாக இன்றைக்கு அந்த பகுதியிலே இருக்கின்ற மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறையிடுகின்றபோது நஷ்டஈடு தருகிறேன் என்று சொல்கிறாராம். இப்படி விவசாயிகள் மேலும் மேலும் துன்புறுத்தப்படுகின்ற நிலை ஏற்படாத வகையில் இன்னும் தேவைப்படுகின்ற தண்ணீரை அரசு அந்த விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலவரப்படி 89 மில்லியன் கன அடி தண்ணீர் அந்த ஏரியிலே இருக்கிறது. சென்னை நகரத்தினுடைய குடிநீர் தேவையைக் கருதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும் நானும் அங்கே இருக்கின்ற தண்ணீர் விவசாயத்திற்குப் போதுமான அளவு, அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அதை திறந்துவிடலாம் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடுதான் அதிகாரிகளை அழைத்து, பொதுப்பணித் துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளையெல்லாம் அழைத்து ஆய்வு செய்ததற்குப் பின்னாலே அங்கே சென்று தண்ணீரைத் திறந்துவிட்டிருக்கிறோம். ஆனால் விவசாயத்திற்காக 20 கன அடி தண்ணீர் தினசரி விடப்படுகிறது. 15 கன அடி தண்ணீர் தான் இன்றைக்கு குடிநீருக்காக கொண்டு வருகிறோம், இரண்டு பாகங்களாகப் பிரித்து குடிநீருக்கும் கொடுக்கிறோம், விவசாயத்திற்கும் கொடுக்கிறோம். 2,500 ஏக்கர் நிலங்களிலே பாசனம் இருக்கிறது. Crops In riened condition என்று சொல்லக்கூடிய அளவிலே, நிலத்திலே முற்றிய

கதிர்கள் இருக்கின்ற காரணத்தினாலே இன்னும் 3 அல்லது 4 wettings கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குத் தேவையான தண்ணீர் அங்கே இருக்கிறது. ஆகவே, கதிர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை. அதே நேரம் 1,200 ஏக்கர் தான் இரண்டாம் போகம் சாகுபடி அதிலே செய்யப்பட வேண்டும். ஆனால் 2,500 ஏக்கர்களில் விவசாயிகள் சாகுபடி செய்தாலும் கூட சாகுபடி செய்த நிலங்களில் எல்லாம் ripened condition -ல் இருக்கின்ற காரணத்தாலே அவர்களுடைய பயிர்களுக்கு பாதுகாப்பு தரப்படும் என்கிற உத்தரவாதத்தோடு இன்றைக்கு தண்ணீர் விடப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாங்களும் விவசாயிகள்தான், நாங்களும் அந்தப் பிரச்சினையைப் பற்றி நன்றாக அறிவோம். ஆகவே, வயல்காடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த பின்னாலே தான் நானும் உள்ளாட்சித் துறை அமைச்சரும் அன்றைக்கு அந்த முடிவை எடுத்து, இரண்டு பிரிவுகளாக பிரித்திருக்கிறோம், ஆகவே, விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் வழங்கப்படும். நஷ்டஈடு என்ற பேச்சுக்கே இடம் இல்லை. தண்ணீர் கொடுக்க முடியாத சூழ்நிலையில்தான் அந்த நஷ்டஈடு என்ற பேச்சுக்கே இடம் வரும். ஆகவே, அங்கே இருக்கின்ற பயிர்களுக்கு தண்ணீர் விடுவதற்கு போதுமான தண்ணீர் இருக்கிறது, அந்தப் பயிர்களை விளைச்சலுக்கு கொண்டு வரும் அளவிற்கு தண்ணீர் விடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, எவ்வித பதட்டமும் அந்தப் பகுதியிலே இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிருக்கு தண்ணீர் விடப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகளோ அப்படி திறந்துவிடுவதில்லை. அந்த ஏரியிலே 7 மதகுகள் இருக்கின்றன. இன்றைக்கு 3-வது மதகு என்று சொல்லப்படுகின்ற மதகின் வாயிலாக தண்ணீர் விவசாயத்திற்கு வந்துகொண்டிருக்க வேண்டும். விவசாயம் நடக்கின்ற அந்த 3-வது மதகு பகுதியிலே இன்றைக்கு அடைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'நானும் ஒரு விவசாயி தான். விவசாயிகளை நாங்கள் துயரத்திற்கு ஆளாக்க மாட்டோம்' என்று சொன்னார்கள். தமிழகத்திலே விவசாயிகள் நிலங்கள் நிறைய இருக்கின்றன. தமிழகம் விவசாய பூமி என்பது எல்லோரும் ஒப்புக்கொள்கின்ற உண்மை. ஆனால் என் தொகுதியைப் பொறுத்தமட்டில் செம்பரம்பாக்கம் ஏரியிலே இருக்கின்ற தண்ணீரை தான் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தொன்றுதொட்டு நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வேறு தொழிலும் இல்லை. அமைச்சர் அவர்கள் பேசும்போது நஷ்டஈடு இல்லை என்று

சொன்னார்கள். நஷ்டஈட்டை நானும் கோரவில்லை, அவர்களும் கோரவில்லை. ஆனால் அங்குள்ள மக்கள் பீதி அடைந்து இருக்கிறார்கள் என்று சொல்லும்போது அமைச்சர் அவர்கள் வருகின்ற வழியிலே விவசாயிகள் எல்லாம் அமைச்சர் அவர்களுடைய காரை நிறுத்தி தங்களுடைய கோரிக்கையை சொல்வதற்கு முனைந்தார்கள். ஆனால் அமைச்சர்கள் இருவரும் காரை நிறுத்தாமல் சென்னைக்கு வந்ததன் விளைவாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் தண்ணீரை தடுத்துவிட்டார்கள் என்ற நோக்கோடு இன்றைக்கு செயல்படுகிறார்கள். அரசு அதிகாரிகள் தண்ணீரை திறப்பதற்கு மறுக்கிறார்கள். இன்றைக்கு அறுவடைக்கு தயாராக இருக்கின்ற நிலங்களைப் பற்றி நான் பேசவில்லை. அறுவடைக்குத் தேவையான தண்ணீரை விடுகின்ற நிலத்திற்கு மட்டும்தான் நான் பேசுகிறேன். அதேபோன்று போளூர் ஏரியில் இருந்து தண்ணீரை குடிநீருக்காக கொண்டு வருகிறார்கள். அதுவும் என் தொகுதியில்தான் இருக்கிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஏரியைப் பற்றி மட்டும் பேசுங்கள். அதற்குத் தனியாகக் கொடுக்க வேண்டும். நீங்கள் கொடுத்ததிலாவது செம்பரம்பாக்கம் மற்றும் போளூர் ஏரி என்று கொடுத்திருந்தால் அமைச்சரிடம் பதில் இருந்திருக்கும்.

திரு. போளூர் வரதன்: தண்ணீர் எடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. விவசாயத்திற்கு போக பாக்கியிருக்கின்ற தண்ணீரை நீங்கள் எடுத்துக் கொள்வதிலே அந்த மக்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. வருங்காலத்திலே, முன்கூட்டியே, அரசு திட்டங்களைத் தீட்டி, எந்த அளவுக்கு பயிர்கள் வைக்க வேண்டுமென்று விவசாயிகளுக்குத் தெரிவித்துவிட்டால் அதற்கு ஏற்றவாறு விவசாயிகள் எந்த விதமான ஆபத்தும் இல்லாமல் பயிர் செய்வார்கள். அதற்கு ஏற்ப அரசு செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். நான் அன்றைக்கு செல்கின்றபோது விவசாயிகள் மூன்றே மூன்று பேர் வந்து என்னிடத்தில் மனுக்களைக் கொடுத்தார்கள். ஏதோ காரிலே வந்து மனுக்களைக் கொடுத்தது போல, மக்களை நாங்கள் சந்திக்காதவர்கள்போல, இவர்கள் எல்லாம் மட்டுமே மக்களைச் சந்திப்பவர்கள்போல சொல்லிக் கொண்டிருப்பது எந்தவிதத்திலும் நியாயம் இல்லாத பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அடித்தளத்திலேயிருந்து வருகின்றவர்

1993 ஏப்ரல் 20] [திரு. எஸ். கண்ணப்பன்]

களை, தினசரி இரண்டாயிரம் பேர்களை நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். சாதாரண தொண்டர்கள் முதல் விவசாயிகள் வரை நாங்கள் பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே, இந்தமாதிரி தவறான தகவலை அவைக்குத் தரக்கூடாது, அன்றைக்கு நானும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் செல்கின்றபோது விவசாயிகள் மூன்றே மூன்று பேர்தான் என்னிடத்தில் வந்தார்கள். நாங்கள் தெளிவாக சொன்னோம். 'இவ்வளவு தண்ணீர் இருக்கிறது. நாங்கள் வயல்களை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்திருக்கிறோம். கதிர்களை எல்லாம் பார்த்திருக்கிறோம். 1,200 ஏக்கர்களுக்கு மேல் விவசாயம் செய்தாலும் 2,500 ஏக்கர்களுக்கும், விளைகின்ற அளவுக்கு தண்ணீர் தரப்படும். ஆகவே, பூரா நீரையும் நாங்கள் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. உங்களுக்கு நிலத்திற்குத் தேவையான தண்ணீரை தருவோம். அதுபோல சென்னையில் குடிநீர் பற்றாக்குறை. உங்களைப் போன்றவர்கள்தான் அவர்களும். நம்முடைய மக்கள் அவர்கள், அவர்களுக்கு பிரச்சினை இருக்கிறது. மீதம் இருக்கிற தண்ணீரை எடுத்துக்கொள்வோம். வெயில் காலங்களில் வெயில் தண்ணீரை குடித்துவிடும். காற்று குடித்துவிடும். ஆகவே, விவசாயத்திற்கு போக மீதம் இருக்கிற தண்ணீரை நாம் பயன்படுத்தியாக வேண்டும். ஆகவே, எந்தவித பிரயோஜனமும் இல்லை அதிலே தேக்கி வைப்பதிலே. அந்த எண்ணத்திலேதான் மீதம் இருக்கிற தண்ணீரை கொண்டு வர வேண்டுமென்று சொன்னோமே தவிர கார்களை எடுத்துக்கொண்டு ஓடுகிற அளவுக்கு எங்களிடத்தில் மக்களுக்கு எந்தவித அதிருப்தியும் கிடையாது. இதுமாதிரி தவறான தகவலை போளூர் வரதன் அவர்கள் சொல்லக்கூடாது. யாரோ சொல்லுகின்ற செய்திகளை எல்லாம் கேட்டு இங்கே பேசக்கூடாது. அங்கே என்ன நடந்தது என்று அவர்கள் விசாரித்திருக்க வேண்டும். எங்களை நேரடியாக சந்தித்த விவசாயிகள் மூன்றே மூன்று பேர்தான் வந்து கொடுத்தார்கள். அவர்களும் சந்தோஷத்தோடு திரும்பிச் சென்றார்கள். 4 நாட்களுக்கு முன்னால் வந்து சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் தண்ணீர் வேண்டும், 3 'வெட்டிங்' என்று சொல்லுகிறார்கள், எங்களுக்கு 4 -'வெட்டிங்' வேண்டுமென்று சொன்னார்கள். நானும் 4 'வெட்டிங்' விடச் சொல்கிறேன் என்று சொல்லி, அதை அதிகாரிகளிடமும் சொல்லி இருக்கிறேன். ஆகவே என்னுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினை தினசரி வந்து கொண்டிருக்கிறது. நான் விவசாயிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன். திரு. போளூர் வரதன் வேண்டுமானால் சட்டமன்றத்தில் கேட்கவேண்டுமென்பதற்காக, அவருடைய தொகுதிப் பிரச்சினையைப் பேசவில்லையே என்று மக்கள் ஆதங்கப்படுவார்களே என்ற உணர்வோடு சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அவருக்கு அந்தக் கடமை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அவருக்கு அந்தக் கடமை இருக்கிறது.

அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் தவறான தகவல்களைச் சொல்லக் கூடாது.

முற்பகல் 10-10.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் செல்கிறபோது காரை மறித்தார்கள், நிற்காமல் வந்துவிட்டார்கள் என்றீர்கள். அவர் அதற்குச் சொல்கிறார். இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது.

திரு. போளூர் வரதன் : தவறான தகவல் சொல்வதாக அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர், நான் சந்தித்தேன். என்கிறார். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டி வரும். (குறுக்கீடு) அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ஸ்ரீதரன். (குறுக்கீடு) போளூர் வரதன், நீங்கள் சொன்னீர்கள், சொன்னது தவறான தகவல் என்று அமைச்சரவர்கள் சொல்வதற்கு உரிமையில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் போது, கேள்வி நேரத்தின்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) அமைச்சர்கள் நிற்காமல் வந்துவிட்டார்கள் என்று சொல்வது தவறான தகவல். (குறுக்கீடு) முறைப்படி செய்வதாக இருந்தால், நான் அப்போதே நினைத்தேன், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று.

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், அமைச்சர் உள் நோக்கம் கற்பிக்கிறார். Is it not a point of order?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. டாக்டர் ஸ்ரீதரன்.